செயற்பொறியாளர், பொபது., கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்: பொறி. மா.விஜயதுரை, எம்.இ.,
செயற்பொறியாளர், பொபது.,

செ.மு.எண். சி2/2292/ /2018 / CP./ நாள்: 25.05.2018.

பொருள்:- பணியமைப்பு- தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி- திருமதி.ரா.சரண்யா, இளநிலை உதவியாளராக- பணியில் சேர்ந்தது, பணியில் சேர்ந்த நாளான 23.10.2017 மு.ப. முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பாக.

பார்வை:-
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை-3 அவர்களின் க.எண்.5428/பிஎஸ்டி-எச்2/2017/நாள்:26.09.2017.
2. முதன்மை தலைமைப்பொறியாளர் (க) மற்றும் தலைமைப் பொறியாளர்(க) சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது. சென்னை அவர்களின் செ.மு. எண்.எஸ் 3( 3)/34252 2017-1/ நாள் 12.10.2017.
3. தலைமைப் பொறியாளர்(க)திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செ.மு. ஆணை எண்: நி2/4779/2017-3/ நாள்: 17.10.2017.
4. கண்காணிப்புப்பொறியாளர்,பொபது., கட்டிட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு)வட்டம், கோயம்புத்தூர் அவர்களின் செ.மு. ஆணை எண்: நி2/2606/ 2017/ ஆ2 நாள்: 20.10.2017.
5. இவ்வலுவலக செ.மு. ஆணை எண்: சி2/2292/2017/ நாள்: 20.10.2017.

---------------

பார்வை (1) மற்றும் (2)இல் உள்ள ஆணைகளின்படி இக்கோட்டத்தில் 23.10.2017 முற்பகல் திருமதி.ரா.சரண்யா, இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார். அரசு சார்நிலைபணி விதி 23(அ) மற்றும் அரசாணை எண்.191 பொபது/நாள் 01.01.1962-ன்படி இவருக்கு பணியேற்ற நாளான 23.10.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து 23.10.2017 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், இவரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வு,பொதுப்பணித்துறை கணக்கு தேர்வு பாகம் 1,2 மற்றும் அரசால் நடத்தப்படும் பவானிசாகர் பயிற்சியில் தேர்வு பெறவேண்டும் எனவும் இதன்மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இந்த ஆணை மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற கிளை மதுரை நடுவர் ஆணையத்தில் நிலுவையாக உள்ள வழக்கின் தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையின் பேரில் பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

இவ்வாணை தற்காலிகமாக வழங்கப்படுகிறது எனவும் விதிகளுக்குட்பட்டு எவ்வித முன் அறிவிப்புமின்றி மேற்கண்ட ஆணை ரத்து செய்யப்படும் எனவும் இதற்காக தனியர் எவ்வித உரிமையும் கோரலாகாது என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொபது.
கட்டிட (க&ப) கோட்டம்,
கோயம்புத்தூர்.

25/5/18

பெறுநர்
திருமதி. ரா.சரண்யா,
கட்டிட (க&ப) கோட்டம்,
கோயம்புத்தூர்.
நகல் பணிப்பதிவேட்டிற்கு
நகல் சி6 & உபரி நகல்